**28.03.2026** **CC 59/2020** **DW3. இந்திரா**

கடந்த 07.07.2023–ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P.18/2025 dated 12.06.2025–ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 27.03.2026.**

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் இவ்வழக்கில் உள்ள தரப்பினர் இல்லை என்றால், சரிதான். Ex.P1 காசோலையானது குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரருக்கு கொடுத்தது என்றால், இல்லை. என்னிடம் காட்டப்படும் Ex.P1 காசோலையில் உள்ளது எனது கணவரான குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கையொப்பம் என்றால், சரிதான்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு சொந்த ஊர் மேல்மிடாலம் என்றால், சரிதான். அவர் அந்த இடத்திலிருந்து நாகர்கோவிலுக்கு எப்பொழுது சென்று வசித்தார் என்றால், 1997–1998ம் காலக்கட்டங்களில் சென்றார். அதன்பிறகு மேல்மிடாலத்தில் வசிக்கவில்லை என்றால், சரியல்ல.

3. மேல்மிடாலத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் பெற்றோர் வீடு அமைந்துள்ளது என்றால், சரிதான். நாகர்கோவிலில் வாடகை வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால், சரிதான். எனது நாகர்கோவில் முகவரியை முதல் விசாரணையில் கூறவில்லை என்றால், சரிதான். எனது நிரந்தர முகவரியை தான் கூறினேன்.

4. என்னுடைய நிரந்தர முகவரியானது மேல்மிடாலம் என்பதை காண்பிப்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்களை தாக்கல் செய்ய இயலுமா என்றால், முடியாது. எனக்கு ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என 2 பிள்ளைகள் என்றால், சரிதான். எனது மகன் எங்கு படித்தார் என்றால், பட்டப்படிப்பு வெளிநாட்டில் படித்தார். எந்த ஆண்டு எனது மகன் வெளிநாடு சென்று படித்தார் என்றால், 2014ம் ஆண்டு போலந்து நாட்டிற்கு சென்று படித்தார்.

5. எனது மகன் வெளிநாட்டுப் படிப்பை படித்து முடித்தாரா என்றால், இல்லை. நிறுத்தி விட்டார். எனது மகன் வெளிநாட்டில் படித்ததற்கு எவ்வளவு செலவு செய்தோம்

என்றால், அவரது கல்லூரி கட்டணம் ஒரு ஆண்டிற்கு 3.5 லட்சம் ரூபாய். மேலும் மாதத் தேவைக்காக 20 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தோம். எனது மகன் வெளிநாட்டில் எவ்வளவு காலம் படித்தார் என்றால், சுமார் 2 வருடங்கள் வெளிநாட்டில் இருந்திருப்பார்.

6. நான் அந்தக் காலக்கட்டத்தில் எனது மகனிற்காக சுமார் 15 லட்சம் செலவு செய்திருப்பேன் என்றால், சரியல்ல. அவ்வளவு தொகை வராது. அதற்கு பிறகு என்ன படித்தார் என்றால், Diplomo in Aerospace என்ற படிப்பை சென்னையில் படித்தார். அதன் பிறகு என்ன செய்தார் என்றால், அதன்பிறகு 2018ம் வருடம் இத்தாலி நாட்டிற்கு சென்று தற்சமயம் வரை அங்கு தான் படித்து வருகிறார். அதற்கு நான் எவ்வளவு செலவு செய்து வருகிறேன் என்றால், எனது மகன் Scholarship–ல் படித்து வருகிறார்.

7. எனது மகன் Scholarship–ல் படித்து வருவதை நிரூபணம் செய்வதற்கு ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால், எனது மகனிடம் இருந்து வாங்கி தாக்கல் செய்யலாம். எனது மகள் எங்கு படித்து வருகிறார் என்றால், பிலிப்பைனஸ் நாட்டில் மருத்துவ படிப்பு படித்து முடித்து விட்டார்.

8. எனது மகள் எத்தனை வருடங்கள் படித்தார் என்றால், 5 வருடங்கள் படித்தார். அவருக்கு எவ்வளவு தொகை செலவு செய்திருப்பேன் என்றால், 32 லட்சம் செலவு செய்தேன். தற்சமயம் அவர் என்ன செய்கிறார் என்றால், நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனையில் வேலை பார்த்து வருகிறார்.

9. எனது கணவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால், காய்கறி வியாபாரம் செய்து வந்தார். கொரோனா காலக்கட்டத்தில் 2020க்கு பிறகு கடையை மூடிவிட்டார். அவர் எந்த இடத்தில் காய்கறி வியாபாரம் செய்து வந்தார் என்றால், வடசேரி சந்தையில் கடை வைத்து நடத்தி வந்தார். கடையின் எண் 40 என நான் நினைக்கிறேன். ஆனால் சரியாக தெரியவில்லை. அது சம்மந்தமாக ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும்.

10. மேற்படி காய்கறி கடையானது யாருக்கு சொந்தமானது என்றால், அரசாங்கத்திற்கு சொந்தமானது. எனது கணவர் காய்கறி வியாபாரத்தை மொத்தமாக அல்லது சில்லரை வியாபாரம் செய்தாரா என்றால், இரண்டுமே செய்தார். எனது கணவருக்கு மாதவருமானம் எவ்வளவு வந்தது என்றால், சரியாக எனக்குத் தெரியாது.

11. உண்மையில் எனது கணவர் மேற்படி தொழில் செய்யாத காரணத்தினால் தான் நான் வருமானம் குறித்து சொல்லவில்லை என்றால், சரியல்ல. நான் எத்தனை வருடங்களாக வழக்கறிஞராக பணி செய்து வருகிறேன் என்றால், 26 வருடங்களாக பணி செய்து வந்தேன்.

12. நான் முதலில் எந்த மூத்த வழக்கறிஞரிடம் பணி செய்தேன் என்றால், S.S.சுப்பிரமணியபிள்ளை மற்றும் D. ஹரி என்ற வழக்கறிஞர்களிடம் பணி செய்தேன். எனக்கு தனியாக வழக்கறிஞர் அலுவலகம் இல்லை என்றால், தற்சமயம் இல்லை. நான் எப்பொழுதுமே வழக்கறிஞர் அலுவலகம் தனியாக வைத்ததில்லை என்றால், சரியல்ல.

13. தற்சமயம் மாவட்ட அரசு குற்றத்துறை வழக்கறிஞரிடம் அலுவலகத்தில் பணி செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. எனக்கு எவ்வளவு வழக்குகள் உள்ளது என்றால், அது சரியாக தெரியாது. எனக்கு எனது மாத வருமானத்தையும் சரியாக கூற முடியாது என்றால், மாதம் சுமார் 60 ஆயிரம் வீதம் வரும். மேற்படி வருமானத்திற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால், இயலும்.

14. நான் நாகர்கோவிலில் எத்தனை வீடுகளில் வாடகைக்கு இருந்திருப்பேன் என்றால், எனது பிள்ளைகளின் படிப்பு வசதிக்கு ஏற்றாற் போல் நாங்கள் ஒரு 7–8 வீடுகளில் வசித்திருக்கிறோம்.

15. நான் எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ள வீட்டில் கடன் வாங்கிவிட்டு அந்த இடத்திலிருந்து மாறிச் செல்வேன் என்றால், சரியல்ல. நான் முறையாக வாடகை கொடுக்காமல் அந்த வீட்டின் உரிமையாளரிடம் கூறாமல் அந்த வீட்டிலிருந்து மாறி விடுவேன் என்றால், சரியல்ல.

16. நான் புகார்தாரர் வழக்கறிஞர் அலுவலகத்தில் 2008ம் ஆண்டு பணியாற்றினேனா என்றால், அது எனது அலுவலகம் ஆகும். அது எனது வழக்கறிஞர் அலுவலகம் என நிரூபணம் செய்வதற்கு ஆவணங்களை தாக்கல் செய்ய இயலுமா என்றால், அந்த முகவரியில் வழக்குகளின் வக்காலத்து நாமா நிறைய உள்ளது.

17. அந்த அலுவலகத்திற்கு வாடகைப் பத்திரம் உள்ளதா என்றால், அந்த அலுவலகமானது எனது கணவரின் உறவினருடையது என்பதால் நம்பிக்கையின்

அடிப்படையில் பத்திரம் எதுவும் போடவில்லை. நான் வாடகைப்பத்திரம் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

18. அந்த வழக்கறிஞர் அலுவலகத்திற்கு மின்சார கட்டணம் செலுத்தினேனா என்றால், இவ்வழக்கின் புகார்தாரர் வழக்கறிஞர் விமலன் தான் செலுத்துவார். இவ்வழக்கின் புகார்தாரர் தான் அந்த அலுவலகத்தை நடத்தி வந்தார் என்பதால் அவர் தான் மின்சாரக் கட்டணத்தை கட்டினார் என்றால், நான் நாகர்கோவிலில் இருந்ததால் அலுவலகம் சம்மந்தமாக வேலைகளை அவர் பார்த்துக் கொள்வார். அதனடிப்படையில் மின்சாரக் கட்டணத்தை அவர் செலுத்தினார்.

19. நான் அந்த வழக்கறிஞர் அலுவலகத்தில் பணியாற்றவில்லை என்றால், சரியல்ல. நான் புகார்தாரரிடம் இளம் வழக்கறிஞராக தான் பயிற்சி செய்தேன் என்றால், சரியல்ல. அவருக்கு முன்னரே நான் வழக்கறிஞராக பதிவு செய்து விட்டேன். நான் புகார்தாரரின் வழக்குகளை தான் நடத்தி வந்தேன் என்றால், இல்லை 2 பேரின் வழக்குகளும் அங்கு இருந்தது.

20. எனக்கு சுமார் எவ்வளவு வழக்குகள் அந்த அலுவலகத்தில் இருந்திருக்கும் என்றால், எண்ணிக்கைகள் சரியாக தெரியாது. புகார்தாரருக்கு அந்த அலுவலகத்தில் 200க்கு மேற்பட்ட வழக்குகள் இருந்திருக்கும் என்றால், பொதுவாக இரண்டு பேரும் சேர்ந்து தான் வக்காலத்து நாமா தாக்கல் செய்திருப்போம்.

21. அந்த அலுவலகத்தில் உள்ள அனைத்து வழக்குகளும் புகார்தாரர் வழக்குகள் என்றால், சரியல்ல. அந்த அலுவலகத்தை காலி செய்து விட்டு வேறு எங்கு நான் வழக்கறிஞராக பணி செய்து வந்தேன் என்றால், நீதிமன்றத்திற்கு அருகே உள்ள கட்டிடத்தில் பணி செய்து வந்தேன்.

22. அந்த கட்டிடத்தின் எண் என்ன என்று தெரியுமா என்றால், சரியாக ஞாபகம் இல்லை. அந்த கட்டிடத்தின் எண் 16–47/5 என்றாலும், அது ஆத்திவிளை ஊராட்சிக்குட்பட்டது என்றாலும், சரிதான். மேற்படி கட்டிடத்தை கட்டியது புகார்தாரர் தான் என்றால், புகார்தாரரின் பெயரில் அந்த கட்டிடம் உள்ளது.

23. புகார்தாரர் தான் அந்த இடத்தை விலைக்கு வாங்கி அந்தக் கட்டிடத்தைக் கட்டினார் என்றால், நாங்கள் இருவரும் சேர்ந்து புகார்தாரரின் பெயரில் அந்த இடத்தை வாங்கி அலுவலகம் கட்டினோம். ஆனால் நான் அது குறித்து எதுவும் கேட்கவில்லை.

24. நான் அந்த கட்டிடத்தை வாங்குவதற்கு பண உதவி செய்யவில்லை என்றாலும், புகார்தாரர் தான் சொந்த பணத்தில் வாங்கி கட்டினார் என்றால், சரியல்ல. நான் உண்மையில் புகார்தாரருடன் சேர்ந்து அந்த கட்டிடத்தை கட்டியிருந்தால் அதற்கான ஒப்பந்தம் வைத்திருப்பேன் என்றால், சரியல்ல.

25. நான் அந்த கட்டிடத்தில் கீழ்த்தளத்தில் வாடகைக்கு குடியிருந்தேன் என்றால், குடியிருந்தேன் ஆனால் வாடகைக்கு அல்ல. புகார்தாரரின் Junior Advocate என்பதாலும் இருவரும் ஒரே அலுவலகத்தில் பணி புரிவதாலும் என்னிடம் வாடகை கேட்கவில்லை என்றால், சரியல்ல. நான் வாடகைக்கு அங்கு குடியில்லை.

26. நான் எனது குடும்பத்துடன் தான் அங்கு வசித்து வந்தேன் என்றால், சரிதான். முதல் மாடியில் வழக்கறிஞர் அலுவலகம் செயல்பட்டு வந்தது என்றால், சரிதான். நான் வழக்கறிஞர் என்பதால் ஒரு காசோலையை எப்படி கையாள வேண்டும் என்ற விவரமும் அதனை எப்படி பாதுகாக்க வேண்டும் என்ற விவரமும் எனக்குத் தெரியும் என்றால், சரிதான்.

27. நான் முதல் விசாரணையில் எனது கணவர் அடிக்கடி வெளியூர் செல்வார் என்று கூறிய நிலையில் அவர் எந்தெந்த ஊருக்கு செல்வார் என்றால், புனே, கர்நாடகா, பெங்களூர், மகாராஷ்டிரா போன்ற இடங்களுக்கு காய்கறி வாங்குவதற்கு செல்வார். அங்கு சென்று காய்கறி வாங்குவதற்கு உரிமம் வைத்துள்ளாரா என்றால், இல்லை.

28. உண்மையில் எனது கணவர் அங்கு சென்று காய்கறி வாங்காத காரணத்தினால் தான் அதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. பொதுவாக காய்கறிகள் விவசாயிகளிடம் இருந்து வாங்கும் பொழுதும் கடைகளில் இருந்து வாங்கும் பொழுதும் அதற்குரிய பில் கொடுக்க வேண்டும் என்றால், விவசாயிகளிடம் வாங்கும் பொழுது பில் கொடுக்க மாட்டார்கள். கடைகளில் வாங்கும் பொழுது பில் கொடுப்பார்கள்.

29. அந்த பில்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால், ஒரு சில பில்களை தாக்கல் செய்யலாம். காய்கறிகள் ஏற்றி வரும் வாகனத்தின் பில்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால், அந்த காய்கறிகள் ஹார்பருக்கு சென்று விடும். அதற்கு இரசீகள் உள்ளதா என்று எனக்குத் தெரியவில்லை. மேற்படி விவரங்களை நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

30. நான் எனது முதல் விசாரணையில் எனது கணவர் காசோலைகளில் கையொப்பம் செய்து என்னிடம் தந்து வைத்தார் என்று கூறிய நிலையில் எத்தனை காசோலைகள் கொடுத்தார் என்றால், 10–12 காசோலைகள் கொடுத்து வைத்திருந்தார்.

**புகார்தாரர் தரப்பில் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.